# வாழ்விக்கும் வைணவம்


## வைணவச் சுடராழி டி.ஏ. ஜோஸப், பாண்டிச்சேரி

18, Fourth Cross (Upstairs), Rainbow Nagar, Pondicherry 605 011

Website: http://dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com


கடைக்குப் போய் ஒரு பொருள் வாங்க வேண்டும் என்றால் கையில் காசு வேண்டும். பணமில்லாதவனுக்குக் கடைவீதியில் பண்டம் இல்லை. ஆனால் விலைப்பணம் வாங்காமல் விலைமதிப்பற்ற பொருளை வழங்கும் ஒரு முதலாளி இருக்கின்றான். அவனுடைய கடை ஆன்மிகக் கடை. அவன் பெயர் கண்ணன். வெறுங்கையில் வந்தால்தான் தருவேன் என்பான். 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' – அதாவது எதுவும் இல்லாமல் வெறும் கையனாய் வரவேண்டும் என்பான். அவன் அளிப்பததோ முக்தி. இந்த முக்தியைப் பெற என்னென்னவோ விலை கொடுத்து சக்திக்கேற்ப பக்தி செய்து யோகம், த்யானம், யாகம் என பல விலை கொடுத்தும் அவன் அவர்களுக்கு அதைத் தரவில்லை.

ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவர் இல்லை என்று அனாதையாய்க் கதறுபவருக்கு முக்தியைச் சீக்கிரம் கொடுப்பான் இந்த முகுந்தன். அவனிடம் சதா அதனைக் கேட்டுத் தொந்தரவு பண்ணத் தேவையில்லை. 'ஸக்ருதேவ' அதாவது ஒரே ஒரு முறை கேட்டால் போதும். அதையும் உரிய காலத்தில் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. 'அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே' என்று சொல்லி விட்டு மார்மீது கைபோட்டு உறங்கலாம். நாம் உத்தமராக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. 'தோஷோ யத்யபி' அதாவது எவ்வளவு குற்றமிருந்தாலும் 'ந த்யஜேயம்'ஒரு நாளும் கை விடமாட்டேன் என்பான். வியப்பாக இருக்கிறதா?

ஆண்டியாகித் தாடி வளர்த்து, தலையில் ஜடை வளர்த்து, உடுத்திய உடைக் கிழிய விரல் நுனி நகம் வளர, படுத்திய பசி தொடர, உடலெங்கும் அழுக்குப் படிய, மலையென்ன, காடென்ன, குகையென்ன என்று தனியிடம் தேடித் தவம் புரிபவருக்கு மட்டுமே தானமாகக் கிடைக்கும் முக்தி இவ்வளவு அனாயாசமாக எப்படிக் கிடைக்கும் என்று பார்க்கிறீர்களா? ஒரு வேளை ரகசிய உபவாசங்கள் உண்டோ? என்று சிந்திக்கிறீர்களா? அதுவும் இல்லை, ஆண்டாள் சொல்கிறாள்;''பல்கலனும் யாம் அணிவோம், ஆடை உடுப்போம்; அதன் பின்னே பால்சோறு மூடநெய் பெய்து முழங்கை வழி வார கூடியிருந்து கானம் சேர்ந்து உண்போம்''

வசுதேவன் மகன் வாசுதேவன் காட்டிய இந்தப் பாதை வைணவப்பாதை: ஸ்ரீராமாநுஜர் சீர் செய்து, பூர்வாசாரியர்கள் அலங்கரித்து, ஆழ்வார் பாசுரங்கள் வழிகாட்டும் அகன்ற பாதை. இந்தப் பாதை அநாதியானது. இதில் கால் வைத்தவர்கள் ஊர் போய்ச் சேரத் தவறியதில்லை. யோகத்தில் அடி வைத்தவர்கள் தோல்வியுற்றிருக்கிறார்கள். துவண்டிருக் கிறார்கள். மறுபிறவி பெற்று மீண்டும் பயணத்தைத் தொடர்ந் திருக்கிறார்கள். முக்திக்கு இட்டுச் செல்வற்கென்று ஏற்பட்ட எத்தனையோ வழிகளும் இப்படி அரைகுறை ஆடம்பரங்களாக முடிந்து போன கதைகள் முடிவில்லாமல் காணக் கிடக்கின்றன புராணங்களில்.

ஆனால் இடுவது ஒரு தெண்டன், சொல்வது ஒரு வார்த்தை என்றிருக்கும் இந்த

சரணாகதி மார்க்கம் பார்ப்பதற்கு பலஹீனரின் மார்க்கம் போல் தோன்றும், ஆனால் பலன் அளிப்பதில் பொய்க்காதது. ஞானபலம் உள்ளவர்கள் நம்பிப் பயணிப்பது. நம்பினார் கெடுவதில்லை என்ற நான்குமறையின் தீர்ப்பை நடைமுறையில் நடத்திக் காட்டுவது. தனக்குத் தங்க நிழல் தந்த ஒரு மரத்துக்கு பிள்ளைலோகாசார்யர் தரணி காண மோட்சம் தந்திருக்கிறார், இந்த சரணாகதி உபாயத்தினாலே! மின் காந்தமானது தன்னைத் தொடும் பொருளையெல்லாம் காந்தமயமாக்குவது போல சரணாகதன் ஒவ்வொருவனும் தன்னைத் தீண்டும் ஒவ்வொரு பொருளுக்கும் முக்திதரும் அருகதை பெறுகிறான். ஆறறிவில்லா குறையறிவுப் பிராணிகளும் முக்தி பெறட்டும் என்று புழு பூச்சியையெல்லாம் தொட்டுத் தடவிய மஹான்களின் கதை வைணவத்தில் உண்டு. இவையெல்லாம் எப்படி சாத்யம் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்.

யுகங்களில் சிறந்தது கலி என்று வியாஸர் மும்முறை உரக்கக் கூறிப் பிரகடனம் செய்தார். கலியுகம் என்று ஒரு யுகம தேவைதானா? என்று நாரதர் அவரைக் கேட்டபோது கலிஸ்ஸாது: என்று மும்முறை கூறிக் கலியில்தான் கடவுள் அருள் எளிதாகக் கிடைக்கும் என்று அதற்கான காரணமும் கூறினார். பாவங்கள் சூழ, பவசாகரத்தில் தவிக்கும் நாம் க்ருதயுக மனிதரைப் போல் தர்மவான்களாக வாழமுடியாது. சொல், செயல், சிந்தை மூன்றிலும் பாவமே செய்து பாவியானேன் என்கிறபடி கலி நம்மை நெருக்கும் போது 'ஹரி நாம ஸ்மரணமே சரியான பரிகாரம். தவம் தானம் என்று மற்றை யுகங்களில் மயங்கித் திரிந்த சான்றோருக்கும் இந்த வைணவநெறி கிட்டாததாய் இருந்தது. கலியின் கொடுமை கண்டு, கண்களில் கருணை கொண்டு, இந்த யுகத்தின் சிறப்புப் பரிசாக இந்தச் சரணாகதி மார்க்கத்தை நமக்கு உபகரித்தார்கள்.

இதர மார்க்கத்தினர் நினைப்பது போல் இந்த சரணாகதி மார்க்கம் என்பது. இயலாதவர் கடை பிடிக்கும் இளக்காரமான பாதை அல்ல. சரணாகதி என்பது ஒரு வித்தை. அது ஒரு மஹோன்னத மனநிலை. தெளிந்த உள்ளங்களுக்கு மட்டுமே புலப்படும் திவ்ய ஒளி. அந்தப் பக்தித் தகுதியைப் பாஞ்சாலி பெற்றிருந்ததால் தான் அவளுக்கு அந்தரத்திலிருந்து புடவை சுரந்தது. கஜேந்திரனுக்கு அந்த நம்பிக்கை கனத்திருந்ததனால்தான் கையில் ஆழியோடு காகுத்தன் ஓடி வந்தான் முதலையை வெட்ட! ப்ரஹ்லாதனுடைய உள்ளத்தில் இந்த மனோதிடம் இருந்தமை யால்தான் யானைகளால் அவனை மிதிக்க முடியவில்லை. சாகரத்தின் அலைகளால் அவனைச் சாகடிக்க முடியவில்லை.

இந்த விசுவாசம் எடுத்துப் பேசுவதற்கு எளியது. ஆனால் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமானால் நமக்கு நாரணனின் கருணை வேண்டும். மறதியும் நினைவும் என்னால் ஏற்படுகின்றன என்று கீதையில் முழங்கிய அந்த மாதவனின் கடாக்ஷம் இருப்பவருக்குத்தான் இந்தச் சரணாகதி வித்யை சாத்யப்படும். இந்த வித்தையில் விற்பன்னர்கள்தான் நாம் வணங்கும் பூர்வாசாரியர்கள். சிலருக்கு இந்த சரணாகதி நம்பிக்கை, கருவிலே திருவாய், ஜாயமான கடாட்சமாய் இருக்கும். ஆனால் பலருக்குஅந்தபாக்யம் இருக்காது. அவர்கள் மனம் தெளிந்து தேறுவதற்காகத் தான் ஆசாரிய பக்தியும் பாகவத பக்தியும் வலியுறுத்தப்பட்டன.

சேற்றில் விழுந்து கிடக்கும், வைரம் பதித்த தங்கம், கழுவக்கழுவ ஒளி பெறுவது போல அஜ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கும் நம் ஆத்மா சத்சங்கத்தாலும், சான்றோரை வணங்குவதாலும், சத்ச்ரவணத்தாலும் ஞானம் பெறுகிறது. ஆத்மாவை மலினப்படுத்தும் தமோகுணமான உணவு களும், மனத்தை உலோகாயுதமாக்கும் சகவாசங்களும் புத்தியைக் கெடுக்கும் சங்கீதமும் சம்பாஷணைகளும் நம்மை பகவத் சாந்நியத்திலிருந்து வெகுதூரம் கொண்டு சென்றுவிடும். ஆடு மேயாமல் வேலிகட்டிப் பயிரைப் பாதுகாப்பது போல, நம் முன்னோர்கள் ஆத்ம ஞானத்தை எச்சரிக்கையாய்ப் பாதுகாத்தார்கள். பகவத் விஷயங்களும், பாகவத சம்பந்தமும் என்றும் தம்மைச் சூழ்ந்திருக்கும்படிப் பார்த்துக் கொண்டார்கள். அதனால் தான் அவர்களுக்கு சரணாகதி எளிதாக கை வந்திருந்தது. அந்த எச்சரிக்கை நமக்கு இல்லாததால்தான் நாம் அந்தத் தகுதியை அடைய முடியாமல் தடுமாறுகிறோம்.

புராணங்களிலும் இதிகாசங்களிலும் நாம் படிக்கும் கதைகள் நம் பொழுதை வீணடிக்கும் சினிமாக்கள் அல்ல. நமக்குப் பாடம் புகட்டும் சரித்திரங்கள். அவை நடந்து முடிந்தவை. நடக்க முடியாதவை போல் தோன்றினாலும் கடந்த கால சமுதாயத்தின் மிகுதியான கடவுள் நம்பிக்கையின் காரணத்தால் பூமியில் நிகழ்ந்த அதிமானுஷ்ய சாதனைகள். மனம் அடங்கியதால் மனித இனம் அன்று மாபெரும் சரித்திரங்களை நடத்திக் காட்டியது. இது பூமியா அல்லது புவர் லோகமா என்று சந்தேகிக்கும் வண்ணம் தெய்விகம் பூமியில் நிறைந்திருந்தது. ராமாயணமும் மஹாபாரதமும் பாகவதமும் பக்திச் சரித்திரங்களும் நாம் படிப்பதற்காக ஏற்பட்டவை. பரணில் அடுக்குவதற்கோ, பழைய புத்தகக்காரனுக்கு விற்பதற்கோ அல்ல.

அவற்றைப் படிக்கப் படிக்க அறியாமை நீங்கும். ஆத்ம ஞானம் மலர்ச்சி உறும். உடற்பயிற்சியே செய்யாமல் சோம்பலாய் இருந்துவிட்டு, ஆணழகன் பட்டம் பெற்றவனைப் பார்த்து பொறாமைப் படுவது நியாயமா? ஆன்மநூல்களையும் ஆன்மிக சகவாசங்களையும் புறக்கணித்தே வாழ்ந்து விட்டு, "நான் கண்ணனை அழைத்தேன், அவன் வரவில்லை; ராமனைக் கூப்பிட்டேன், அவன் உதவவில்லை" என்று புலம்புவதில் என்ன நியாயம் இருக்கிறது? ஒரு உலகியல் நண்பன்கூட தீபாவளிக்கு வாழ்த்துச் சொல்லவில்லை என்றால் நட்பை மறந்து விடுகிறான். அப்படி இருக்கும்போது வைணவம் நம்மை வாழ்விக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற நாம் விஷ்ணுவிற்கும் வைணவருக்கும் உகப்பான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறோமோ என்று சிந்திக்க வேண்டும்.

நாம் வளரவேண்டும் என்றும் வாழவேண்டும் என்றும் எண்ணித்தான் சாத்திரங்கள் ஏற்பட்டன. அதற்குரிய ஸ்தானத்தை, மதிப்பை நாம் வழங்காத போது அவை நமக்கு மகிழ்வை எப்படித் தரும்? ஒரு பெரிய ப்ரம்மரகசியத்தை மூன்றே சொற்களில் அடக்கினார்கள் பெரியவர்கள். "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" என்பதுதான் அது. அறத்தை நீ காத்தால் அது உன்னைக் காக்கும் என்பது அதன் பொருள். வைணவத்தை நாம் வாழ்வித்தால் அது உன்னை வாழ்விக்கும். அதை நாம் புறக்கணித்தால் அந்த புண்டரீகாக்ஷன் நம்மைப் புறக்கணிப்பான். அவன் பிராட்டியும் நம்மைப் பார்க்கமாட்டாள். எனவே வாழ்வோம்; வாழ்விப்போம்.